RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22358

# தண்டியலங்காரம் கவிராஜ மார்க்கத்தில் உவமை, உருவக ஒப்பீடு

பி. ரம்யா [அ, *]

[அ] இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியபள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

# Parable and Allegorical Comparison in Thandi Alangaram Kaviraja Margam

**P. Ramya [a, *]**

[a] Department of School of Indian Languages & Comparative Literature, Tamil University, Thanjavur – 613010, Tamil Nadu, India

* Corresponding Author: ramyaptu@gmail.com

Received: 22-04-2022
Revised: 06-07-2022
Accepted: 15-07-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

Just as the metaphorical array of the Thandi Alangaram is more numerous than the metaphorical array, and the metaphorical array is considered the basis and primary for other arrays, in the world of Kannada literature, the Kaviraja Markam emphasizes the metaphorical array and mentions the metaphorical array second and the metaphorical array seventh when explaining the types of arrays. In this article, the metaphorical array in these two books, the ideas of the array of metaphorical arrays, the change in the order of the arrays, the similarities and differences of the Thandi Alangaram Kaviraja Markam metaphorical array, the change in the order of the metaphorical arrays, the similarities and differences of the Thandi Alangaram Kaviraja Markam metaphorical array, etc. are compared and explained.

**Keywords:** Thandi Alangaram, Kaviraja Markam, Parable, Metaphorical Array

## முன்னுரை

இலக்கண உலகில் காலந்தோறும் தோன்றுகின்ற அணி வளர்ச்சிக் கொள்கைக்கு இடமளித்து அணிகளின் வகைகளை முதன்மையாக கூறிய ஒரு நூல் தண்டியலங்காரம் ஆகும். அணி இலக்கணம் சார்ந்த கொள்கைகளில் பல அணிகள் இருப்பினும் அவற்றுள் உவமையும் உருவகமும் தனித்த இடம் வகிக்கின்றன. தமிழ் மொழியில் உள்ள தண்டியலங்காரம் அணியிலக்கணத் தளத்தில் பெரும்பங்கு வகிப்பது போலவே, கன்னட இலக்கிய உலகில் கவிராஜ மார்க்கத்தில் உவமை, உருவக அணிகள் சிறந்து விளங்குவதை, வரிசை நிலையிலும், பொருள் அமைப்பிலும், விளக்க நிலையிலும் ஒப்பிட்டு அவற்றின் ஒருமித்த போக்குகள் வேறுபடுமிடங்களை ஒப்பிடுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தண்டியலங்காரத்தில் உவமை

தண்டியாலங்காரம் குறிப்பிடும் பொருளணிகள் முப்பத்தைந்தில் இரண்டாவதாக அமைந்துள்ளது இவ்வுவமையணி. தண்டியலங்காரத்திற்கு முன்பு உவமை குறித்த கருத்துக்கள் இருந்தாலும், அணிகளுக்காகவே எழுந்த முதல் நூலாக தண்டியலங்காரம் கருதப்படுகிறது. மேலும் தண்டி அணி குறித்த பல கருத்துக்களை நூலில் வெளிப்படுத்தி இருந்தாலும் உவமைக்காக ஒதுக்கியுள்ள அதிக இடத்தை பொறுத்தே அதன் முக்கியத்துவம் உணரப்படுகிறது. உவமை அணியின் முக்கிய பாகுபாடுகளாக இருபத்து நான்கு உவமை வகைகளும் பிற

அணிகளோடு சேர்ந்து வரும் நிலையில் எட்டு வகைகளும், உவமைப் புறனடையில் ஆறு வகைகளும் வருகின்றன.

## தண்டியலங்கார கவிராஜ மார்க்க உவமையணியின் ஒற்றுமை வேற்றுமைகள்

அட்டவணை 1.

| வரிசை எண் | தண்டியலங்காரம் | கவிராஜ மார்க்கம் |
|---|---|---|
| 1. | வகைகளை குறிக்க நூற்பா உண்டு | இல்லை |
| 2. | பொருளடிப்படையில் நூற்பா உண்டு | இல்லை |
| 3. | பிற அணிகளோடு சேர்ந்து வருதல் உண்டு | இல்லை |
| 4. | உவமை புறனடை நூற்பா உண்டு | இல்லை |

## தண்டி அலங்கார கவிராஜமார்க்க உவமை அணியின் இட வரிசை மாற்றம்.

அட்டவணை 2.

| வரிசை எண் | தண்டியலங்கார உவமை அணிகள் | கவிராஜ மார்க்க உவமை அணிகள் |
|---|---|---|
| 1. | விரி உவமை | - |
| 2. | தொகை உவமை | - |
| 3. | இதர விதர உவமை | 4 |
| 4. | சமுச்சய உவமை | - |
| 5. | உண்மை உவமை | 17 |
| 6. | மறுபொருள் உவமை | 25 |
| 7. | புகழ்தல் உவமை | 15 |
| 8. | நிந்தை உவமை | 14 |
| 9. | நியம உவமை | 5 |
| 10. | அநியம உவமை | 6 |
| 11. | ஐய உவமை | 11 |
| 12. | தெரிதருதேற்ற உவமை | - |
| 13. | இன்சொல் உவமை | - |
| 14. | விபரீத உவமை | 3 |
| 15. | இயம்புதல் வேட்கை உவமை | - |
| 16. | பலபொருள் உவமை | 21 பொருள் உவமை |

| | | |
|---|---|---|
| 17. | விகார உவமை | - |
| 18. | மோக உவமை | 10 |
| 19. | அபூத உவமை | 19 |
| 20. | பலவயின்போலி உவமை | - |
| 21. | ஒருவயின்போலிஉவமை | - |
| 22. | கூடா உவமை | 20 |
| 23. | பொது நீங்கு உவமை | 18 |
| 24. | மாலை உவமை | 22 |
| தண்டியலங்கார உவமை பிற அணிகளோடு சேர்ந்து வருதல் | | |
| 25. | அற்புத உவமை | 9 |
| 26. | சிலேடை உவமை | 13 |
| 27. | அதிசய உவமை | 7 |
| 28. | விரோத உவமை | 16 |
| 29. | ஒப்புமைக்கூட்ட உவமை | - |
| 30. | தற்குறிப்பேற்ற உவமை | 2 |
| 31. | விலக்கு உவமை | - |
| 32. | ஏது உவமை | 26 |
| உவமைக்குப் புறனடை (6) | | |
| 33. | தெரிதரு தேற்ற உவமை<br>(வ.எண் 12 புறனடையாக வந்துள்ளது) | - |
| 34. | பலவயின் போலி உவமை<br>(வ.எண் 20 புறனடையாக வந்துள்ளது) | - |
| 35. | பண்பு உவமை | 2 |
| 36. | ஒப்புமை உவமை (வ.எண் 29ல் உள்ள உவமை) | - |
| 37. | சந்தான உவமை | 24 |
| 38. | விலக்கு உவமை<br>(வ.எண் 31 புறனடையாக வந்துள்ளது) | - |

## ஒற்றுமை

ஐய உவமை மட்டும் இரண்டு நூல்களிலும் ஒரே இடத்தில் வந்துள்ளது.

கவிராஜமார்க்கம் உவமையின் வகைகளை குறிப்பிடும்பொழுது அந்த உவமை வகையின் பெயர், சான்று பாடல் வந்துள்ளது.

தண்டியைப் போலவே உவமத் தோற்றத்தில் உள்ள பண்பு உவமை மற்றும் பொருள் உவமையை முதலாவதாக கூறியுள்ளது.

## வேற்றுமைகள்

தண்டியலங்காரத்தில் இதரவிதர உவமை என்பது கவிராஜ மார்க்கத்தில் இதர இதர என்று வந்துள்ளது.

"அதுவே விரியே தொகையே இதர விதரம்"

என்று தண்டி நூற்பாவிலேயே இதர விதரம் என்ற சொல்லே வந்துள்ளது.

தண்டி உவமை அணிகள் முப்பத்து நான்கில் இருபத்து நான்கு மட்டும் கவிராஜ மார்க்கத்தில் வந்துள்ளது.

தண்டி உவமை பொதுவகை நூற்பா 24ல் -15 உவமை அணிகள் கவிராஜ மார்க்கத்தில் வந்துள்ளது.

பொருள் அடிப்படையில் - 1

பிற அணிகளோடு சேர்ந்து வருதல் - 8 இல் 6 உவமை அணிகள் கவிராஜ மார்க்கத்தில் வந்துள்ளது.

புறனடை உவமை - 6 இல் 2 உவமை அணிகள் கவிராஜ மார்க்கத்தில் வந்துள்ளது.

(ஒப்புமைக் கூட்ட உவமை மற்றும் விலக்கு உவமை தவிர்த்து) என மொத்தம் 24 உவமைகள்.

கவிராஜ மார்க்கத்தில் உள்ள இருபத்தாறு உவமை வகைகளில் ஊர்ஜித உவமை மற்றும் வாக்கிய உவமை ஆகிய இரண்டு மட்டும் தண்டியில் வரவில்லை.

தண்டி "புகழ்தல் உவமை" என்பது கவிராஜ மார்க்கத்தில் புகழ் உவமை என்றும், பல பொருள் உவமை என்பது பல்பொருள் உவமை என்றும் சில வேறுபாடுகள் இருப்பினும் பொருள் மாறாமல் வந்துள்ளது. மேலும் பொருள் குறித்து வரும் உவமையாக பொருள் உவமை, மறுபொருள் உவமை, பல பொருள் உவமை, இல் பொருள் உவமை வரிசையில் சிலேடை உவமை இருபொருள் அல்லது பல பொருள் தருவதால் பொருள் நோக்கிய உவமையாக கொள்ளப்படுகின்றது. இதில் தண்டியில் இல்பொருள் உவமை என்ற பெயரில் இல்லாமல் அபூத உவமையாக வந்துள்ளது.

தண்டியில் உள்ள முப்பத்து நான்கு உவமை வகைகளில் விரிஉவமை,தொகை உவமை, சமுச்சய உவமை, தெரிதரு தேற்ற உவமை, இன்சொல் உவமை, இயம்புதல் வேட்கை உவமை, விகார உவமை, பலவயின் போலி உவமை, ஒருவயின் போலி உவமை, ஒப்புமைக் கூட்ட உவமை, விலக்கு உவமை ஆகிய அணிகள் கவிராஜ மார்க்கத்தில் இடம்பெறவில்லை.

உருவக அணியின் அணியியல் சிந்தனைகள்

உவமையையும், உவமிக்கப்படும் பொருளையும் (உவமேயம்) வேறுபடுத்தி கூறாமல் ஒன்றாகவே கூறுவது உருவகம் ஆகும். உவமை அணியில் உவமை முதலிலும் அடுத்து உவம உருபு தொக்கும், தொகாமலும். ஈற்றில் உவமேயம் வரும்.

உவமையின் பொருளும், உவமேயத்தின் பொருளும், அதுபோல அது எனும் வேற்றுமை நீங்க அதுவே அது என ஒன்றாக கருதப்படுவது உருவகமாகும். இதனை,

"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து

ஒன்றென மாட்டின் அஃது உருவகம் ஆகும்"

(தண்டி,பொருள், நுற். 34) என்கிறது.

உருவக அணிகளின் இட வரிசை மாற்றம்

தண்டியலங்காரம் உவமைக்கு அடுத்து உருவகத்தினைக் கூறும் பொழுது உருவக அணியின் வகைகளாக முதலில் பதினைந்து உருவகத்தினையும், பிற அணிகளுடன் சேர்ந்து வரும் நிலையில் ஆறு உருவகத்தினையும், உருவக, உவமைகளுக்கு புறனடையாக வரும் பொழுது ஐந்து உருவகத்தினையும் விளக்கியுள்ளது.

"தொகையே விரியே தொகை விரி எனாஅ

இயைபே இயைபிலி வியநிலை எனாஅ

சிறப்பே விரூபகம் சமாதானம் எனாஅ

உருவகம் ஏகம் அநேகாங்கம் எனாஅ

முற்றே அவயவம் அவயவி எனாஅச்

சொற்றஐம் மூன்றும் மற்றுஅதன் விரியே" தண்டி.பொருளணி.நூற்.35)

தொகை-கூட்டம், சுருக்கம், கூடுதல் எனப் பொருள்படும் உருவகம்.

"உவமையே பொருளாய் ஒன்றிடப் புனைதல்" உருவகம் என்கிறது கவிராஜ மார்க்கம்.

சமஸ்த உருவகம் (தொகை உருவகம்) முதல் வியாஜ உருவகம் வரை 14 உருவகங்களை கவிராஜ மார்க்கம் கூறுகின்றது.

## தண்டியலங்கார கவிராஜ மார்க்க உருவக அணிகளின் இட வரிசை மாற்றம்

அட்டவணை 3.

| வரிசை எண் | தண்டியலங்காரம் | கவிராஜ மார்க்கம் |
|---|---|---|
| 1. | தொகை உருவகம் | 1 |
| 2. | விரி உருவகம் | 2 |
| 3. | தொகை விரி உருவகம் | - |
| 4. | இயைபு உருவகம் | 13 |
| 5. | இயைபிலி உருவகம் | - |
| 6. | வியநிலை உருவகம் | - |
| 7. | சிறப்பு உருவகம் | விசேடன |
| 8. | விரூபக உருவகம் | - |
| 9. | சமாதான உருவகம் | - |
| 10. | உருவக உருவகம் | 11 |
| 11. | ஏகாங்க உருவகம் | - |
| 12. | அநேகாங்க உருவகம் | - |
| 13. | முற்று உருவகம் | - |
| 14. | அவயவ உருவகம் | 3 |

| | | |
|---|---|---|
| 15. | அவயவி உருவகம் | 4 |
| 16. | உவம உருவகம் | - |
| 17. | ஏது உருவகம் | 8 |
| 18. | வேற்றுமை உருவகம் | வேறுபடு (விபிந்த) உருவகம் |
| 19. | விலக்கு உருவகம் | - |
| 20. | அவநுதி உருவகம் | 12 |
| 21. | சிலேடை உருவகம் | 9 |
| 22. | அற்புத உருவகம் | - |

## வேற்றுமைகள்

அட்டவணை 4.

| வரிசை எண் | தண்டியலங்காரம் | கவிராஜ மார்க்கம் |
|---|---|---|
| 1. | பொருள் அணியில் உருவகம் மூன்றாவது அணிவகை | பொருள் அணியில் உருவகம் இரண்டாவது அணிவகை. |
| 2. | வகைகளை குறிப்பிட நூற்பா உண்டு | இல்லை |
| 3. | பிற அணிகளுடன் சேர்ந்து வருதல் நூற்பா உண்டு | இல்லை |
| 4. | உருவக புறனடை நூற்பா உண்டு | இல்லை |
| 5. | தொகை விரி உருவகம், இயைபிலி உருவகம், வியநிலை உருவகம், விரூபக உருவகம், சமாதான உருவகம், ஏகாங்க உருவகம், அநேகாங்க உருவகம், முற்று உருவகம், உவம உருவகம், விலக்கு உருவகம், அற்புத உருவகம் போன்றவை தண்டியில் உண்டு | இந்த உருவகங்கள் கவிராஜ மார்க்கத்தில் இல்லை |

## தண்டியலங்கார கவிராஜ மார்க்க உருவக அணியின் ஒற்றுமை வேற்றுமைகள்

தண்டியலங்காரம் முதலில் வகைப்படுத்தும் உருவக அணி பதினைந்தில் கவிராஜ மார்க்கம் எண்ணிக்கை அளவில் பெரிதும் ஒத்து பதினான்கு உருவக வகையினை கூறுகின்றது. தொகை உருவகம், விரி உருவகத்தை இரண்டு நூல்களுமே முதலில் வகைப்படுத்தியுள்ளன. அதுமட்டுமின்றி இயல்பு உருவகம், சிறப்பு உருவகம் (விசேடன) என்றும், உருவக உருவகம், அவயவ உருவகம், அவயவி உருவகம், ஏது உருவகம், வேற்றுமை உருவகம் (மாறுபடு உருவகம்) அவநுதி உருவகம், சிலேடை உருவகம் போன்ற உருவகங்கள் இரண்டு நூல்களிலும் வந்துள்ளன.

## முடிவுரை

தண்டியலங்கார கவிராஜ மார்க்கத்தில் உவமை உருவக அணிகள் ஒப்பீட்டில் உவமைகளில் வருகின்ற சில வகைகள் உருவகத்திலும் வந்துள்ளன. ஆனால் முறை வைப்பு நிலையில் சிறிது

மாறியுள்ளன. விரி உவமை, தொகை உவமை தண்டியலங்காரத்தில் உண்டு. கவிராஜ மார்க்கத்தில் இல்லை. இந்த இரு உவமைகளும் உருவகத்திற்கு வரும்பொழுது முதலில் தொகை உருவகம், அடுத்து விரி உருவகம் என்று வந்துள்ளது. கவிராஜ மார்க்கத்தில் இந்த இரண்டு உருவகமும் அதே இடத்தில் வந்துள்ளது. ஏது உவமை தண்டியில் முப்பத்து இரண்டாவது இடத்திலும் கவிராஜ மார்க்கத்தில் இருபத்து ஆறாவது இடத்திலும் உள்ளது. ஏது உவமையைப் போல் ஏது உருவகமும் தண்டி, கவிராஜ மார்க்கம் இரண்டு நூல்களிலும் வந்துள்ளது. விலக்கு உவமை, விலக்கு உருவகம் தண்டியலங்காரத்தில் சுட்டப்பட்டுள்ளன. கவிராஜ மார்க்கத்தில் இல்லை. சிலேடை உவமை (தண்டி -26) கவிராஜ மார்க்கம் -13 சிலேடை உருவகம்(தண்டி -21) கவிராஜ மார்க்கம் -9 என இரண்டு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டியலங்கார, கவிராஜ மார்க்கம் ஆகியன தத்தம் மொழி அணிகளைக் காட்டிலும் வடமொழி அணிகள் சிலவற்றையும் கொண்டுள்ளது போல், அவற்றின் உட்பிரிவுகளும் வடமொழி வகைகளை கையாண்டு உள்ளதால் அடிப்படை அணி வகைகள் அன்றி கூடுதல் அணிகளும் காலத்திற்கு ஏற்ப அணியிலக்கண நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டு வகைகள் பெருகலாயின. இவ்விரு நூல்களும் உவமை, உருவக வகைகளை விளக்கும் பொழுது சில பெயர் நிலையில் ஒன்றுமட்டும் பல இடங்களில் வரிசை முறையில் வேறுபட்டும் காணப்படுகின்றன.

## References


Iraamasuppiramaniyam (2000) Thandialangaram, Paari nelaiyam, Chennai.

Venkatachalam, (2021) Kaviraja Margam, Tamil University, Thanjavur

Karunanidhi (2013) Aniyiyal Sinthanaikal, Jupiter Printers, Chennai



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License